## பெருமை மிகுந்த பாரததேசம்

# “நமக்கு வேண்டிய எல்லாமே ஆன்மிகத்தில் இருக்கின்றன!”

**மகாபெரியவர் ஸ்ரீசந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள், ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோரைத் தொடர்ந்து காஞ்சி சங்கர மடத்தின் பீடாதிபதியாக இருக்கும் ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், ‘ராணி’ இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியின் தொடர்ச்சி இதோ:**



**“மகாபெரியவருடன் இருந்திருக்கிறீர்கள். அவரிடம் பிரமித்த விஷயங்கள் பற்றிச் சொல்ல முடியுமா?”**

“வியக்கத்தக்க ஞாபக சக்தி கொண்டவர் மகா பெரியவா. அதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. ‘கம்ப்யூட்டரில்’ வேண்டுமானால் ‘வைரஸ்’கள் இருக்கலாம். ஆனால், அவரின் ஞாபக சக்தியில் சிதறல்கள் எதுவுமே கிடையாது.

எல்லோருடைய நலனிலும் அதிக கவனம், அக்கறைக் கொண்டவர். மேம்போக்காக இல்லாமல், ‘எல்லோரும் நல்லா இருக்கணும்’ என்று மனப்பூர்வமான விருப்பம் கொண்டிருந்தார். தனக்கென எதுவும் வேண்டாவிட்டாலும், ‘உலகில் எல்லாருடைய சிரமமும் தீர வேண்டும்’ என எண்ணினார்... அதையே வேண்டினார்.

தெய்வீக விஷயங்கள்... அது அவருக்கே உரியது. அதை பற்றி நம்மால் எதுவும் கூறுவதற்கு இல்லை. மடத்துக்காக யாராவது உதவி செய்திருந்தால் அதை காலத்துக்கும் மறக்க மாட்டார். மாடு வாங்கிக் கொடுத்தது அல்லது சிறிய சேவை என எத்தகைய உதவிகள் செய்திருந்தாலும்கூட அவற்றை ஞாபகம் வைத்திருப்பார். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறக்கவே மாட்டார்.

அது மட்டுமல்ல... உதவி செய்தவர்களின் பரம்பரையையும், பாரம்பரியத்தையும்கூட கவனத்தில் வைத்திருப்பார். அதாவது, ஒருவருடைய தாத்தா எங்காவது கோவில் கட்டி இருந்தால், அதை நினைவில் வைத்து, அவரின் பேரனிடம் அதைச் சொல்லி மகிழ்ச்சி அடைவார்.

கற்பனைக்கு எட்டாத நினைவாற்றலுடன்... அன்பாலும், அறத்தாலும் பல தலைமுறைகளையும் இணைப்பவர். மொத்தத்தில் அவர் ஒரு பல்கலைக்கழகம். அனைத்துக் கலைகளையும் மதிப்பவர். இதில் எந்த சந்தேகமும் கிடையாது.

அவரை நினைத்து போற்றத்தக்க வகையிலான சம்பவங்கள் நிறையவே உள்ளன. 1984–ம் ஆண்டு ஆந்திராவின் கர்னூலில் இருந்து, நவராத்திரி முடிந்து விஜயதசமி அன்று ஜெயேந்திரர் சகிதம் நாங்கள் மூன்று பேரும் பாத யாத்திரையாக காஞ்சிபுரம் நோக்கிக் கிளம்பினோம்.

தமிழ்ப் புத்தாண்டு அன்று காஞ்சிபுரத்தை அடைய வேண்டும். யாத்திரை நிறைவுபெற வேண்டிய தினத்தன்று, கங்கைகொண்டான் மண்டபம் அனுமார் கோவில் அருகே வந்தபோது ரிக்‌ஷா ‘பஞ்சர்’ ஆகிவிட்டது. என்றாலும் பல இடங்களையும் சுற்றிகொண்டு, இரவு இரண்டு மணிக்கு இங்கு வந்தடைந்தோம்.

காஞ்சிபுரம் மீது அவருக்கு தனி மரியாதை



**பி.சுவாமிநாதன்**

இருந்தது. இந்த ஊரில் தங்கி இருப்பதற்காகவே வந்தார். 91 வயது முதல் இங்குதான் இருந்தார்.

அவரிடம் எதிலும் நேர்த்தி உண்டு. ரொம்ப வருடம் கழித்து இங்குள்ள மண்டபத்தில் சந்திரமவுலீஸ்வரர் பிரதோஷ பூஜை செய்தார். அப்போது வயது 93 இருக்கும். அந்த சிவபூஜையில் மனம் உருகிச் செய்யும் அர்ச்சனை, அபிஷேகம் போன்றவற்றை அந்த வயதிலும் வெகு நேர்த்தியாக செய்தார்.

எல்லோரது நலனிலும் மிகுதியாக அக்கறை இருந்தது.கிராமத்துக்கோவில்,அய்யனார்உள்ளிட்ட கோவில் பூசாரிகளுக்காக 'டிரஸ்ட்' ஆரம்பித்தார். பிரமிக்கத்தக்க–சந்தோஷப்படத்தக்க பல விஷயங்களை நடத்திக் காட்டி இருக்கிறார். அவை அத்தனையும் அம்சமாகவும் இருக்கும்; அபூர்வமாகவும் இருக்கும். சாதாரணமாக மனிதர்களால் செய்ய முடியாததைக்கூட சர்வசாதாரணமாக செய்துவிடுவார்."

**"மடத்துக்கு வரும் கடிதங்களைப் பார்ப்பது, கோவில் கும்பாபிஷேகத்துக்குச் செல்வது, பூஜை–யாத்திரை என்பது உள்ளிட்ட அவர் செய்த பல்வேறு அறச்செயல்களை இப்போது நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். இதை எப்படி உணர்கிறீர்கள்?"**



"முந்தைய இரண்டு பெரியவர்களுக்கும் அளித்த ஊக்கமும், பயிற்சியும்தான் எனக்கு வழிகாட்டியாக இருக்கின்றன. அதாவது, பொறுப்புள்ளவர்களுடன் செயல்பட்டேன் என்றுதான் கூற வேண்டும். அந்தப் பணிகளை இனியும் சிறப்பாக தொடர்ந்திட வேண்டியது இருக்கிறது. சிலவற்றை ஒப்பிட முடியாது... ஒப்பிடவும் கூடாது.

இரண்டு பெரியவர்களும் இந்த நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்து... தமிழகத்துக்காக, மக்களின் முன்னேற்றத்துக்காக, தமிழ் கலாச்சாரத்தைக் காப்பதற்காக ஏராளமான பணிகளைச் செய்திருக்கிறார்கள்.இந்தியாவில் கலாச்சாரத்துறையில் தமிழகம் சிறப்பான இடத்தைப் பெறுவதற்கு அவர்கள் ஆற்றிய பணி மிக உயர்ந்தது. அதை நல்லமுறையில் தொடர்ந்து செய்து வருவது முக்கியம்.

அவர்கள் இருவரும் ஆரம்பித்த அந்தப் பணிகளை... அது இலக்கியம், ஆன்மிகம், கல்வி, மருத்துவச் சேவை என எதுவாகவும் இருக்கலாம். சமயம், சமுதாயம் சார்ந்த அந்தப் பணிகளை... மக்களை ஈடுபடுத்தி சிறப்பாக செய்வதன் மூலம், பெருமையைக் கட்டிக் காக்க வேண்டும். நல்ல விஷயங்களை கட்டியவர்கள் அவர்கள். அவற்றைக் காப்பாற்ற வேண்டியது நாம்.

பராமரிப்புதான் முக்கியமான பணி. அதற்கு நிறைய தன்னார்வலர்கள் தேவை. படித்த, வசதி உள்ள, உழைப்பை அளிக்கக்கூடிய தன்னார்வலர்களை ஒன்றிணைக்க வேண்டும். இந்த மூன்றுவித அன்பர்களின் ஒத்துழைப்புடன் மேற்கண்ட பணிகளை தொடரச் செய்ய வேண்டும்.



தீர்க்க தரிசனம்–கரிசனத்துடன் கூடிய திட்டமிடுதல், உருவாக்குதல் போன்ற பணி நிறைவடைந்துவிட்டது. அதில் பெரிய பணி கிடையாது. அதாவது, 'என்னென்ன செய்ய வேண்டும்... அதனால் யாருக்கெல்லாம் நல்லது?' என்ற வேலை முடிவடைந்துவிட்டது. அவை நல்ல முறையில் தொடர்ந்து நடப்பதற்கு நல்ல அன்பர்கள் கூட்டத்தை உருவாக்க வேண்டியது உள்ளது."


**"இளைஞர்களிடையே பக்தி உணர்வு இருந்தாலும்... அது, லவுகீகம் சார்ந்த யுக்தியாக உள்ளது. திரைப்படங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பக்திக்கு இரண்டாம் இடமே தருகிறார்கள். இதை எப்படி மாற்ற வேண்டும்? மேலை நாட்டு கலாசாரத்தால் நமது பாரம்பரியம் விட்டுப்போவது போல் உள்ளதே... அதற்கு என்ன தீர்வு?"**

"நம்மிடத்திலே இல்லாத சில விஞ்ஞான விஷயங்களில், தேவைப்படும் அளவுக்கு வெளிநாட்டை நாம் பின்பற்றலாம். அதாவது, புதிதாக ஒரு கருவி வந்துள்ளது, நவீன தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டு உள்ளது என்றால் அதை தேவைப்படும் அளவுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால், வெளிநாட்டுக் கருவியாக நாம் மாறிவிடக்கூடாது. அதாவது, அவர்களின் பகடைக்காயாக ஆகிவிடக்கூடாது.



நமது சிறந்த கலாசாரத்தை வெளிநாடுகளில் பரப்ப வேண்டும். இது எவ்வளவு உயர்ந்தது, பரந்த மனப்பான்மைக் கொண்டது, அனைவரின் முன்னேற்றத்தையும் உள்ளடக்கியது என்பதை வெளிநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்த்து பரப்ப வேண்டும்.



கலாசாரத்தில் தன்னிறைவு பெற்றது நமது நாடு. எனவே, அதைப் பொருத்தவரை வெளியில் இருந்து





தேவை எதுவும் கிடையாது. ஆகவே, நம்மிடத்தில் உள்ள பரிபூரணத்தன்மை–முழுமையை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

இந்து சமயத்தில் மனித நேயம், விஞ்ஞானம், ஆயுர்வேதம், வான சாஸ்திரம் இருக்கிறது. இப்படி விஞ்ஞானமும், வளர்ச்சியும், விவேகமும் கொண்டது இந்து சமயம். இதன் சிறப்பை... தகுந்தவர்கள்– அறிஞர்கள் மூலமாக அறிந்துகொண்டு, நம்பிக்கையுடன் செயல்பட்டு, அந்த பாரம்பரியத்தில் இருந்து மாறாமல் இருக்க வேண்டும்.

விஞ்ஞானம், கலாசாரம் என்பது வேறு வேறு. பெருமைமிக்க நமது பாரத நாட்டில் பொழுதுபோக்கு அம்சங்களில்கூட கலாசாரம், நாகரிகத்தைப் புகுத்தி நல்ல முறையில் வடிவமைத்திருக்கிறார்கள். இந்தப் பொழுதுபோக்குகளில் கலாசாரம், நம்பிக்கை, நட்பு ஆகிய மூன்றும் உண்டு.அதாவது, கலாசாரம் மாறாமலேயே... அதையொட்டியே பொழுதுபோக்கை அந்தக் காலத்திலேயே உருவாக்கி வைத்துள்ளார்கள். பஜனையில்கூட பக்தியையும், சங்கீதத்தையும் உள்ளடக்கி இருக்கிறார்கள்.

எனவே, வெளிநாட்டின் பொழுதுபோக்கு அம்சங்களின் நோக்கம் வேறு... இந்திய விளையாட்டின்– கலைகளின் நோக்கங்கள் என்பது வேறு! தர்மத்தில் இருந்து அகலாமல் இருப்பது இந்திய கலைகளின் நோக்கம். அது, கோவிலாக இருக்கட்டும்... அன்னதானமாக இருக்கட்டும் அல்லது விளையாட்டாக இருக்கட்டும். அவற்றில் தர்மமும், மரியாதையும், பொறுப்புணர்ந்து செயல்படுதலும் முக்கியம். எனவே, அடிப்படையிலேயே நமது நாட்டின் கலாசாரத்தில்–பொழுதுபோக்கில் வித்தியாசம் இருக்கிறது.

மேலைநாட்டு விஞ்ஞானத்தில் தேவைப்பட்டதை மட்டும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். கலாசார விஷயத்தில் மற்றவர்களுக்குத் தேவையான வழிமுறைகளை நாம் சொல்லித் தர வேண்டும். நம் ஊரைச்சேர்ந்த 'யோகா', இன்று வெளிநாடுகளிலும் பரவலாகி இருக்கிறது.

நம்முடைய கலாசாரம் உயர்ந்தது என்பது கர்வத்துக்கானது அல்ல... கவுரவத்துக்கான– பெருமைக்கான விஷயம்! அன்றாட பழக்க வழக்கமும், சுற்றுப்புறச் சூழலும் முக்கியமானது. குடும்பத்திலே குழந்தைகளை எப்படி வளர்க்கிறார்கள் என்பது பிரதானம். வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. அதேபோன்று தடங்கல்கள்– மனதை திசை திருப்பக்கூடிய அம்சங்களும் நிறைய இருக்கின்றன.

எனவே... ஒருமுகத்தன்மையும், ஆன்மிகத்திலே ஈடுபாடும் அவசியம். எளிமையான முறையில்கூட பக்தி மார்க்கத்தில் ஈடுபட முடியும். தினசரி பாராயணம், பிரார்த்தனை, தியானம், கோவில் தரிசனம்... இதுபோன்ற எளிமையான வழிமுறைகள் இருக்கின்றன.

ஆகவே, 'என்.ஜி.ஓ.' போன்ற நல்ல அமைப்புகள்–பக்தர்கள் சங்கங்களை உருவாக்கி இளைஞர்களை ஒருங்கிணைக்க வேண்டும். ஆரம்ப காலகட்டத்தில் புத்தகங்கள் கொடுப்பது, பிரசங்கம் ஏற்பாடு செய்வது, பிரசாதம் விநியோகிப்பது என பல விஷயங்களில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

பக்கவிளைவுடன்கூடிய உடனடி பலன் என்பது உண்டு. பக்க விளைவு இல்லாத நீண்ட கால, நிரந்தர பலன் என்பதும் உண்டு. ஆன்மிகம், இந்து சமயம் என்பது நீண்டகாலத்துக்கு, நிரந்தரமான சுகம் – அமைதியைக் கொடுக்கக்கூடியது. 'பாஸ்ட் ஃபுட்' மாதிரி சில விஷயங்களில் பக்கவிளைவுடன் கூடிய பலனும் உண்டு. அதாவது, நல்லது கிடைப்பது போல இருக்கும்... கூடவே, வேறு என்ன கிடைக்கும் என்பது தெரியாது! உடனடி பலனை எதிர்பார்த்து வழிமாறிச் சென்றுவிடக் கூடாது.

பாதுகாப்பான பயணத்துக்கு, வீட்டில் இருக்கும் பெரியவர்கள், அவர்கள் பெற்றோராக இருக்கலாம்... தாத்தா– பாட்டியாக இருக்கலாம். அவர்களின் உதவியோடு பக்தி மார்க்கத்தில் குழந்தைகளை பழக்கப்படுத்த வேண்டும். அந்தப் பழக்கம் நல்ல பக்குவத்தை ஏற்படுத்தும்.

இந்தப் பணி எளிமையானதுதான். ஆனால், அதைச் செய்ய கூட்டு முயற்சி தேவை. பெற்றோர்கள், பொதுமக்கள், கோவில் நிர்வாகம் என எல்லோரும் ஒன்று சேர்ந்து இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

உண்மையில் இளைஞர்களிடம் திறமை இருக்கிறது... உற்சாகம் இருக்கிறது. அவர்களுக்குத் தேவை நல்ல வழிகாட்டுதல்தான்! கூடவே பொறுமையும், நம்பிக்கையும் முக்கியம். உடனடி பலனை எதிர்பார்த்து வழிமாறிச் சென்றுவிடக்கூடாது."

**"இளைஞர்களுக்கு என்றில்லை... பெரியவர்களுக்கும்கூட பக்தி இருந்தாலும் வாழ்க்கையில் போதிய பிடிப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஒரு துன்பம் வந்ததும் சோர்ந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு எந்த**

**மாதிரியான வழி நடத்துதல் அவசியம்?"**

"பல கருத்துகளும் இந்து சமயத்தில் இருக்கின்றன. விவேகம் தேவை. பகுத்தறிவு, விஞ்ஞானம், விகாசம் என்கிற வளர்ச்சி... அதாவது, நம்முடைய உறுப்புகள் நல்ல செயல்களை செய்வதற்காக எப்படி நமது சக்தியை உபயோகப்படுத்த வேண்டும் என்கிற புரிதல், வழிகாட்டுதல் போன்றவை நமது இந்து சமயத்தில் இருக்கின்றன. அதாவது, இந்து மதத்தில் 'சப்ஜெக்ட்' இருக்கிறது... நல்ல 'பிரசன்டேஷன்' தேவைப்படுகிறது.


இவை பாடத்திட்டத்தில் இல்லாததாலும், கோவில்கள் அமைப்பு சுருங்கிவிட்டதாலும்தான் நிறையவே இழப்புகள். மாடவீதி, ராஜவீதிகள், உற்சவங்கள், நித்திய பூஜைகள் போன்றவையும் சுருங்கிவிட்டன. இந்து மதத்தில் நல்ல விஷயங்கள் இருக்கின்றன. கற்றுக்கொள்ள பல நல்ல நூல்கள் கிடைக்கின்றன. மகாபாரதத்தில் இல்லாத நீதி வேறு எதிலும் கிடையாது. இருந்தும் விரிவான விளக்கம், விநியோகம் தேவையாக இருக்கிறது.


ஒரு விஷயத்தை எப்படிச் சொல்ல வேண்டும் என்பது முக்கியமானது. புரியும்படி சொல்லுதல், அலுப்புத் தட்டாமல் இருத்தல், ஒரே நாளில் சொல்ல வேண்டுமா... தினமும் சொல்ல வேண்டுமா, பத்து நிமிடம் என்றால் சவுகரியமாக இருக்குமா என்பது முக்கியம்.

'கற்றலில் இனிமை' என்று சொல்வது போல... சொல்வதிலும் இனிமை தேவை. எல்லோரையும் அடையும்விதமாக அடிக்கடி பிரசங்கம் செய்து, ஆர்வத்தை உருவாக்கி, அரவணைத்துச் சொல்ல வேண்டும். இதுதான் உலகுக்குத் தேவை.


நாளைய உலகில் மக்கள் நம்பிக்கையுடனும், நட்புடனும் வாழ்வதற்கு ஆன்மிகம் என்கிற அடிப்படை அஸ்திவாரம் அவசியம். இதன் மீதுதான் மனித வாழ்க்கை என்கிற கட்டுமானம் அமைகிறது. அஸ்திவாரம் நன்றாக இருந்தால்தானே கட்டிடங்கள் சிறந்து இருக்கும்?


ஆகவே, தன்னம்பிக்கையை இழந்துவிடாமல், இறைவன் மீது இருக்கும் நம்பிக்கையை இழந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மனிதர்களிடையே பரஸ்பரம் இருக்க வேண்டிய நம்பிக்கை... அது வேலை– வியாபாரம் செய்யும் இடம் என எதுவாக இருந்தாலும் அவர்களிடையே உள்ள நம்பிக்கை குறைந்துவிடாமல், அதைக் காப்பாற்றும் விதத்தில் இளம் வயதிலேயே நாம் சமயம் சார்ந்த கல்வியை அளிப்பது அவசியம். புத்தகங்கள் தயார் செய்து, பிரசங்கிகள் தயார் செய்து ஆன்மிகக் கல்விப் பயிற்சியை அளிக்க வேண்டும்.











இந்தப் பணியை உறுதுணையாகவும், ஊடுபயிராகவும் செய்ய வேண்டும். என்ஜினீயர், டாக்டர், வக்கீல் என என்ன படிப்பு படித்தாலும்... நமது கலாசாரம் என்ன? நம் தேசத்தின் வரலாறு எத்தகையது? நம்முடைய பண்பாடு எப்படிப்பட்டது? என்பதை இளைஞர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

இந்தியாவுக்கு நிறைய பொறுப்புகள் இருக்கின்றன. இந்தியாவை வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படி புரிய வைக்க வேண்டிய செயலையும் இளைஞர்கள் செய்ய வேண்டும்.

நாம் நல்லவர்களாக இருந்தாலும்... மற்றவர்கள் நம்மை கெட்டவர்களாக புரிந்துகொண்டால் அதனால் லாபம் இல்லை. எனவே, வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் நமது நாட்டின் கலாசாரத்தை சரியான விதத்தில் புரிந்துகொள்ளும்படியாக நாம் செயலாற்ற வேண்டும்.

இதற்கு இளையோருக்கு வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. அவற்றில் குறுக்கீடுகள் வராமல் சரியான விதத்தில் வெளி உலகுக்கு நம்மை வெளிப்படுத்த வேண்டும்."

**"கலாம் காலத்தில் ஜனாதிபதி பதவி, எளிமையால் மக்களைக் கவர்ந்தது. அதே போன்று உங்களை மாதிரியான ஆன்மிகவாதிகள் மக்களை நோக்கி பயணிக்கும் எண்ணம் உண்டா?"**

"மக்களை நோக்கிய எங்களுடைய பயணம் குறைவாக இருக்கலாம். ஆனால், பார்வையோ மக்களின் நன்மையை நோக்கித்தான் இருக்கிறது" என சிரிக்கிறார்.

நிறைவாக... "அடுத்த பீடாதிபதியை எப்போது எதிர்பார்க்கலாம்?" என்ற கேள்வியை முன்வைத்தோம். புன்னகையே பதிலாகிறது. 'அதற்கான தேடலில் இருக்கிறோம். இன்னும் கொஞ்சம் பொறுக்கலாமே?' என்பதாக அவரது பார்வை உணர்த்துகிறது.

மலந்த முகத்துடன்... "மறுபடியும் சந்திப்போம்" என கரம் குவித்து எழுகிறார் ஸ்ரீவிஜயேந்திரர். வாசலில் காத்திருந்தவர்களுக்கு மறுபடியும் அருளாசி வழங்குகிறார். அந்த பக்தர்களிடம்தான் எத்தனை மகிழ்ச்சி – மனநிறைவு!

**– சுப்ரா & மகதன்**